# விரைவுக்குறியீட்டு (QR) வினாக்கள்

## வரலாறு - அலகு 1. முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. எந்த வருடம் டிரபால்கர் போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டார்?
 ***அ) 1805*** ஆ) 1806 இ) 1815 ஈ) 1821

2. எந்த நாடு அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்ஸிடம் இருந்து கைப்பற்றியது?
 அ) ரஷ்யா ஆ) இங்கிலாந்து ***இ) ஜெர்மனி*** ஈ) ஆஸ்திரியா

3. இளந்துருக்கியர் புரட்சி நடைபெற்ற ஆண்டு _______
 அ) 1905 ஆ) 1906 இ) 1907 ***ஈ) 1908***

4. இரண்டாம் பால்கன் போரின் முடிவில் எந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது?
 ***அ) புகாரெஸ்ட் உடன்படிக்கை*** ஆ) பிரெஸ்ட் - லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை
 இ) லண்டன் உடன்படிக்கை ஈ) பாரிஸ் உடன்படிக்கை

5. செராஜிவோவில் கொல்லப்பட்ட ஆஸ்திரிய இளவரசரின் பெயர்
 அ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ***ஆ) பிரான்ஸ் பெர்டினாண்டு***
 இ) பிரான்ஸ் ஜோசப் ஈ) பிரான்ஸப்

6. முதல் உலகப்போர் நடைபெற்ற போது ரஷ்யாவின் மன்னராக இருந்தவர் யார்?
 அ) கெய்சர் வில்லியம் II ***ஆ) சார் நிக்கோலஸ் II***
 இ) பிரான்ஸ் பெர்டினாண்டு ஈ) நெப்போலியன்

7. 1918ல் ரஷ்யா ஜெர்மனியுடன் செய்து கொண்ட உடன்படிக்கை
 அ) வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஆ) புகாரெஸ்ட் உடன்படிக்கை
 இ) லண்டன் உடன்படிக்கை ***ஈ) பிரேஸ்ட் - லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை***

8. மைய அணியில் இருந்த நாடுகள்
 ***அ) ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி மற்றும் இத்தாலி***
 ஆ) ரஷ்யா, ஜெர்மனி மற்றும் இத்தாலி
 இ) பிரட்டன், ஜெர்மனி மற்றும் இத்தாலி
 ஈ) அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் இத்தாலி

9. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர்
 அ) உட்ரோ வில்சன் ***ஆ) சர் எரிக் டிரம்மண்ட்***
 இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஆர்லாண்டோ

10. ரஷ்யப்புரட்சி நடைபெற்ற ஆண்டு
 ***அ) 1917*** ஆ) 1918 இ) 1911 ஈ) 1939

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சார் இரண்டாம் நிக்கோலஸ் ***ரோமனோவ்*** வம்சத்தைச் சார்ந்தவர்.
2. ***லூசிடானியா*** என்னும் அமெரிக்க கப்பல் ஜெர்மனியால் தாக்கப்பட்டு மூழ்கப்பட்டது.
3. ரஷ்ய பாராளுமன்றம் ***டூமா*** என அழைக்கப்பட்டது.
4. ***போல்ஷ்விக்*** கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப்பெயரிடப்பட்டது.
5. பிராவ்தா என்பது ஒரு ரஷ்யமொழிச் சொல். அதன் பொருள் ***உண்மை*** என்பதாகும்.

### III. பொருத்துக.

1. உட்ரோ வில்சன் - அ) ஜெர்மனி
2. லாயிட் ஜார்ஜ் - ஆ) ரஷ்யா
3. கிளமென்சோ - இ) அமெரிக்கா
4. லெனின் - ஈ) பிரான்ஸ்
5. இரண்டாம் கெய்சர் வில்லியம் - உ) இங்கிலாந்து

| விடைகள்: | 1 - இ | 2 - உ | 3 - ஈ | 4 - ஆ | 5 - அ |
|---|---|---|---|---|---|

## வரலாறு - அலகு 2. இரு உலகப்போருக்கு இடையில் உலகம்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. அமெரிக்க பங்குச்சந்தையின் வீழ்ச்சி ஏற்பட்ட ஆண்டு ________
அ) 1927 ஆ) 1928 ***இ) 1929*** ஈ) 1930

2. முசோலினி எந்தக்கட்சியில் உறுப்பினரானார்?
***அ) பாசிசக் கட்சி*** ஆ) நாசிசக் கட்சி இ) கம்யூனிசக் கட்சி ஈ) தொழிலாளர் கட்சி

3. லேட்டரன் உடன்படிக்கை எக்காரணத்தால் முக்கியத்துவமானது?
அ) வாட்டிகன் நகரத்தை ஒரு சுதந்திர அரசாக முசோலினி அங்கீகரித்தார்.
ஆ) திருச்சபை இத்தாலிய அரசை அங்கீகரித்தது.
***இ) அ, ஆ இரண்டும்***
ஈ) அ மட்டும் சரி.

4. ஹிட்லர் குடியரசு தலைவராகவும், ராணுவத்தின் தலைமை தளபதியாகவும் பொறுப்பேற்றுக் கொண்ட ஆண்டு
அ) 1933 ***ஆ) 1934*** இ) 1935 ஈ) 1936

5. போயர்கள் எனப்பட்டோர் யாவர்?
அ) ஆப்பிக்காவில் வசித்தவர்கள்.
***ஆ) தென்னாப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக் குடியேறிகள்.***
இ) தென்அமெரிக்காவில் பிறப்புரிமை பெற்றவர்கள்.
ஈ) மேற்கண்ட அனைத்தும்.

6. 'இன ஒதுக்கல்' என்ற கொள்கை பின்பற்றப்பட்ட நாடு
***அ) தென் ஆப்பிரிக்கா*** ஆ) தென் அமெரிக்கா
இ) ஐரோப்பா ஈ) ஆசியா

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ***லேட்டரன்*** உடன்படிக்கையை முசோலினிக்கும் போப்பிற்கும் இடையே 1929ல் கையெழுத்தாயிற்று.
2. முசோலினி ***1935ல்*** எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தார்.
3. நாசிசக் கட்சியை நிறுவியவர் ***ஹிட்லர்***
4. ஹிட்லரின் சுயசரிதை நூல் ***மெயின் காம்ப்***.
5. போயர்கள் வெளிநாட்டினரை ***யுட்லேண்டர்ஸ்*** எனக் குறிப்பிட்டனர்.

## வரலாறு - அலகு 3. இரண்டாம் உலகப்போர்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ஜப்பான் மஞ்சூரியாவின் மீது படையெடுத்த ஆண்டு ________
அ) 1930 ***ஆ) 1931*** இ) 1932 ஈ) 1933

2. அச்சு நாடுகள் எனப்பட்டவை?
***அ) இத்தாலி, ஜெர்மனி மற்றும் ஜப்பான்*** ஆ) இத்தாலி, ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா
இ) இத்தாலி, ஜெர்மனி மற்றும் ரஷ்யா ஈ) இத்தாலி, ஜெர்மனி மற்றும் பிரிட்டன்

3. சூடட்டன்லாந்து ________ நாட்டின் ஒரு பகுதியாகும்.
***அ) செக்கோஸ்லோவாக்கியா*** ஆ) ஆஸ்திரியா
இ) ஜெர்மனி ஈ) இத்தாலி

4. எந்த நாடு அமெரிக்கக் கப்பற்படைத்தளமான முத்துத்துறைமுகத்தின் மீது தாக்குதலைத் தொடுத்தது?
அ) ஜெர்மனி ஆ) இத்தாலி இ) துருக்கி ***ஈ) ஜப்பான்***

5. எந்த ஆண்டு ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டை வீசியது?
***அ) 1945*** ஆ) 1947 இ) 1948 ஈ) 1940

6. ஐ.நா சபை தற்போது எத்தனை உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது?
அ) 192 ***ஆ) 193*** இ) 195 ஈ) 189

7. 'வெனிஸ் நகர வணிகர்' என்னும் நாடக நூலை எழுதியவர் ________
அ) P.C. சாங் ஆ) ஜான் ஹம்பிரி ***இ) ஷேக்ஸ்பியர்*** ஈ) பிராங்கிளின்

8. 1936ல் ரைன்லாந்தின் மீது படையெடுத்த நாடு எது?
அ) ரஷ்யா ஆ) போலந்து இ) பிரான்ஸ் ***ஈ) ஜெர்மனி***

9. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உலகம் ________ துருவங்களானது.
***அ) 2*** ஆ) மூன்று இ) ஒன்று ஈ) இவற்றுள் ஏதும் இல்லை

10. மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடன சாசனத்தை ஐ.நா சபை ஏற்றுக் கொண்ட ஆண்டு _____
அ) 1947 ***ஆ) 1948*** இ) 1949 ஈ) 1950

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. 1938ல் இங்கிலாந்து பிரதமர் ***சேம்பர்லின்*** ஜெர்மனியுடன் மியூனிச் உடன்படிக்கையை செய்து கொண்டார்.
2. ***சிடுமூஞ்சிகள்*** மற்றும் ***சூறாவளிகள்*** எனப் பெயரிடப்பட்ட போர் விமானங்களை இரண்டாம் உலகப்போரின் போது பிரிட்டன் பயன்படுத்தியது.
3. இரண்டாம் உலகப்போரில் பிரிட்டனுக்கு உதவி செய்ய ***கடன் குத்தகைத் திட்டம்*** என்ற திட்டம் அமெரிக்காவால் தொடங்கப்பட்டது.
4. இரண்டாம் உலகப்போருக்குப் பின் சுதந்திரம் பெற்ற முதல் நாடு ***இந்தியா***
5. பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ***5*** நிரந்தர உறுப்பினர்கள் ***10*** உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## வரலாறு - அலகு 4. இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. நவீன சீனாவின் தந்தை யார்?
அ) சியாங்-கை-ஷேக் ஆ) யுவான் -ஷி-கே
***இ) சன்-யாட்-சென்*** ஈ) சூ-யென்-லாய்

2. வம்போவா இராணுவ மையத்தின் முதல் இயக்குநர் யார்?
***அ) சியாங்-கை-ஷேக்*** ஆ) யுவான்-ஷி-கே
இ) சன்-யாட்-சென் ஈ) மைக்கேல் போரோடின்

3. எந்த வருடம் சியாங்-கை-ஷேக் பீகிங்கை கைப்பற்றினார்?
அ) 1925 ஆ) 1926 ***இ) 1928*** ஈ) 1930

4. எந்த வருடம் சென்டோ (CENTO) ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
அ) 1991 ஆ) 1970 இ) 1975 ***ஈ) 1979***

5. பெரிஸ்ட்ரோய்கா யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) குருஷ்ஷேர் ***ஆ) கோர்பசேவ்*** இ) யெல்ஸ்டின் ஈ) ரீகன்

6. கோமிங்டாங் கட்சி யாரால் நிறுவப்பட்டது?
அ) சியாங்-கை-ஷேக் ஆ) யுவாங்-ஷி-கே ***இ) சன்-யாட்-சென்*** ஈ) சூ-யென்-லாய்

7. கீழ்க்காணும் எந்த ஒப்பந்தம் சோவியத் நாட்டினால் செய்து கொள்ளப்பட்டது?
அ) நேட்டோ ஆ) சீட்டோ இ) சென்டோ ***ஈ) வார்சா ஒப்பந்தம்***

8. முதலாளித்துவ நாடுகள் மற்றும் பொதுவுடைமை நாடுகள் ஆகிய இரு பிளவுகளிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகள் ________ என அழைக்கப்பட்டன.
அ) முதலாம் உலக நாடுகள் ஆ) இரண்டாம் உலக நாடுகள்
***இ) மூன்றாம் உலக நாடுகள்*** ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை

9. எந்த வல்லரசுகளின் அணியோடும் இராணுவக் கூட்டுறவு கொள்ளாமல் இருத்தல் என்ற கொள்கை கொண்டவை ________
***அ) அணிசேரா இயக்கம்*** ஆ) நேட்டோ
இ) சென்டோ ஈ) சீட்டோ

10. ஐரோப்பிய ஒன்றியத்தில் மொத்தம் ________ உறுப்பு நாடுகள் உள்ளன.
அ) 26 ஆ) 27 ***இ) 28*** ஈ) 29

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. யூதநாடு என்ற பெயரில் துண்டு பிரசுரத்தை வெளியிட்டவர் ***தியோடோர் எர்ட்செல்***
2. அரேபியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு ***1945***
3. அமெரிக்காவிற்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்கியவர் ***பிடல் காஸ்ட்ரோ***
4. யூதர்களின் பண்டைய தாயகம் ***பாலஸ்தீனம்*** ஆகும்.
5. ஜெர்மனி ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டு ***1990***

**III. பொருத்துக.**

1. அபினிப் போர்கள் - அ) எகிப்து
2. சூயஸ் கால்வாய் - ஆ) 1954
3. சீட்டோ - இ) ரஷ்யா
4. க்ளாஸ்நாஸ்ட் - ஈ) இந்தோனேஷியா
5. பாண்டுங் - உ) சீனா

| விடைகள்: | 1 - உ | 2 - அ | 3 - ஆ | 4 - இ | 5 - ஈ |
|---|---|---|---|---|---|

## வரலாறு - அலகு 5. 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. பிரம்ம சமாஜத்தை நிறுவியவர் யார்?
   ***அ) ராஜாராம் மோகன் ராய்*** ஆ) தேவேந்திரநாத் தாகூர்
   இ) கேசப் சந்திரசேன் ஈ) ஆத்மராம் பாண்டுரங்
2. ஆதி பிரம்ம சமாஜம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது?
   அ) ராஜாராம் மோகன் ராய் ***ஆ) தேவேந்திரநாத் தாகூர்***
   இ) கேசப் சந்திரசேன் ஈ) ஆத்மராம் பாண்டுரங்
3. பிரார்த்தனை சமாஜம் நிறுவப்பட்ட இடம்
   அ) பூனா ஆ) சென்னை ***இ) பம்பாய்*** ஈ) கல்கத்தா
4. தக்காணக் கல்வி கழகத்தை நிறுவியவர்
   ***அ) எம்.ஜி.ரானடே*** ஆ) ராமகிருஷ்ணர்
   இ) ராஜாராம் மோகன் ராய் ஈ) தேவேந்திரநாத் தாகூர்
5. 'வேதங்களுக்குத் திரும்புவோம்' என முழங்கியவர்
   அ) ஈஸ்வர் சந்திர வித்யா சாகர் ***ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதி***
   இ) ராஜாராம் மோகன் ராய் ஈ) ராமகிருஷ்ணர்
6. நாராயணகுரு பெரிய கோவிலை எங்கு நிறுவினார்?
   அ) திருச்செந்தூர் ***ஆ) அருவிபுரம்*** இ) கன்னியாகுமரி ஈ) திருநெல்வேலி
7. தயானந்தா ஆங்கிலோ வேதிக் பள்ளிகளை (DAV Schools) உருவாக்கியது ________.
   அ) பிரம்ம சமாஜம் ***ஆ) ஆரிய சமாஜம்***
   இ) ராமகிருஷ்ணா மிஷன் ஈ) ஆதி பிரம்ம சமாஜம்
8. 1893ல் உலக சமய மாநாடு எங்கு நடைபெற்றது?
   ***அ) சிக்காகோ*** ஆ) லண்டன் இ) பாரிஸ் ஈ) ரோம்
9. தியோபந்த் என்ற மீட்பியக்கம் யாரால் ஏற்படுத்தப்பட்டது?
   ***அ) முஸ்லீம்கள்*** ஆ) இந்துக்கள் இ) பார்சிகள் ஈ) பௌத்தர்கள்
10. 'ஒருபைசா தமிழன்' என்பது ________.
   ***அ) வாராந்திர பத்திரிக்கை*** ஆ) தினசரி இ) கதை ஈ) புத்தகம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:-**

1. ரஹ்னுமாய் மஜதயாஸ்னன் சபா என்ற அமைப்பை நிறுவியவர் ***பர்துன்ஜி நௌரோஜி.***
2. சாது ஜன பரிபாலன சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு ***1907.***
3. இராமலிங்க அடிகள் பிறந்த இடம் ***மருதூர்.***
4. சீக்கியர்களுக்காக கால்சா கல்லூரி ***அமிர்தசரஸ்***இல் நிறுவப்பட்டது.
5. சமத்துவ சமாஜத்தை நிறுவியவர் ***வைகுண்ட சுவாமிகள்.***

**III. பொருத்துக**

1. பிரம்மஞான இயக்கம் - அ) வைகுண்ட சுவாமிகள்
2. அகிலத் திரட்டு - ஆ) கர்னல் H.S ஆல்காட்
3. அத்வைதாந்த சபை - இ) நாராயண குரு
4. ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் - ஈ) அன்னிபெசண்ட்
5. தன்னாட்சி இயக்கம் - உ) அயோத்தி தாசர்

| விடைகள்: | 1 - ஈ | 2 - அ | 3 - உ | 4 - இ | 5 - ஆ |
|---|---|---|---|---|---|

## வரலாறு - அலகு 6. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. ஆங்கிலேயருக்கு எதிரான தென்னிந்திய கூட்டமைப்பின் கிளர்ச்சியை _______ உருவாக்கியவர்.
   அ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஆ) பூலித்தேவர்
   இ) ஊமைத்துரை ***ஈ) மருது பாண்டியர்***
2. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் _______.
   அ) சிவகங்கை ***ஆ) கயத்தாறு***
   இ) காளையார் கோவில் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
3. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?
   அ) பூலித்தேவர் - நெற்கட்டும் சேவல்
   ஆ) வேலுநாச்சியார் - காளையார் கோவில்
   இ) கோபால நாயக்கர் - விருப்பாட்சி
   ***ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன் - சிவகங்கை***
4. வேலூர் புரட்சி வெடித்தது
   ***அ) ஜூலை 10, 1806*** ஆ) ஆகஸ்டு 10, 1806
   இ) ஜூலை 11, 1906 ஈ) ஆகஸ்டு 11, 1806
5. தமிழ்நாட்டில் முதன்முதலில் கிழக்கிந்திய நிறுவனத்தை எதிர்த்தவர்
   ***அ) பூலித்தேவர்*** ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்
   இ) மருது சகோதரர்கள் ஈ) வேலுநாச்சியார்
6. பாளையக்காரர் முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதி
   ***அ) காகத்திய பேரரசு*** ஆ) பால பேரரசு இ) பிரதிகார பேரரசு ஈ) சோலங்கி பேரரசு
7. தமிழகத்தில் பாளையக்காரர் முறையினை அறிமுகப்படுத்தியவர்
   அ) லட்சுமி நாயக்கர் ஆ) யதுல் நாயக்கர்
   ***இ) விஸ்வநாத நாயக்கர்*** ஈ) கோபால நாயக்கர்
8. மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்ட இடம்
   ***அ) திருப்பத்தூர் கோட்டை*** ஆ) பாஞ்சாலங்குறிச்சி கோட்டை
   இ) சங்ககிரி கோட்டை ஈ) சிவகங்கை கோட்டை
9. கீழ்க்காண்பவர்களில் தென்னிந்திய கூட்டமைப்பில் இணையாதவர்
   அ) மருது பாண்டியர் ஆ) கேரளவர்மா ***இ) பூலித்தேவர்*** ஈ) கோபால நாயக்கர்
10. வேலூர் கலகத்திற்கான காரணம்
    அ) சிப்பாய்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்பட்டது.
    ஆ) சிப்பாய்களுக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தது.
    இ) இராணுவத்தில் புதிய விதிமுறைகள் பின்பற்றப்பட்டது.
    ***ஈ) இவையனைத்தும்.***
11. வேலூர் கலகத்தில் முதலில் பலியானவர்
    ***அ) கர்னல் பேன்கோர்ட்*** ஆ) கர்னல் மீக்காரஸ்
    இ) மேஜர் ஆம்ஸ்ட்ராங் ஈ) லெப்டினென்ட் எல்லி
12. வேலூர் கலகத்தை ஒடுக்கியவர்
    அ) மேஜர் கூட்ஸ் ***ஆ) கர்னல் ஜில்லஸ்பி*** இ) கேப்டன் யங் ஈ) லெப்டினென்ட் பாப்ஹாம்

## வரலாறு - அலகு 7. காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக.

1. பின்வருவனவற்றுள் எந்த முறையை ஒழிக்க டிடு மீர் இயக்கம் செயல்பட்டது?
   அ) பலதார முறை **ஆ) ஜமீன்தாரி முறை**
   இ) ஏகாதிபத்தியம் ஈ) வட்டிக்கு கடன் கொடுக்கும் முறை

2. கீழ்க்கண்ட எந்த பகுதியில் ∴பராசி இயக்கம் தொடங்கப்பட்டது?
   **அ) கிழக்கு வங்காளம்** ஆ) மத்தியப் பிரதேசம்
   இ) கேரளா ஈ) டெல்லி

3. கோல் கிளர்ச்சி நடைபெற்ற ஆண்டு
   அ) 1830-31 ***ஆ) 1831-32*** இ) 1832-33 ஈ) 1833-34

4. சரியான கூற்றை கண்டறிக.
   அ. சாந்தலர்கள் ராஜ்மஹால் மலைப்பகுதியைச் சேர்ந்தவர்கள்
   ஆ. சிந்து மற்றும் கணு ஆகியோர் தலைமையில் சாந்தலர்கள் எழுச்சி பெற்றனர்.
   இ. சாந்தல் பர்கானா மண்டலம் என்ற தனி மண்டலத்தை ஆங்கிலேய அரசு உருவாக்கியது. அ)
   அ) மற்றும் ஆ மட்டும் ஆ) ஆ மற்றும் இ மட்டும்
   இ) இ மற்றும் ஈ மட்டும் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

5. கீழ்க்கண்டவற்றுள் தவறாக பொருந்தியுள்ள இணையை கண்டறிக.
   அ) பாரக்பூர் - மங்கள் பாண்டே **ஆ) டெல்லி - மௌல்வி அஹமதுல்லா**
   இ) கான்பூர் - நானாசாகிப் ஈ) ஜான்சி - ராணி லட்சுமிபாய்

6. கீழ்க்கண்ட கூற்றுகளில் 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் தோல்விக்கான காரணம் தொடர்புள்ளவை எவை?
   I. ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு இல்லாதது II. இராணுவ பலம் இல்லாதது
   அ) I மட்டும் ஆ) II மட்டும் **இ) I மற்றும் II** ஈ) எதுவுமில்லை

7. பின்வருவனவற்றில் எது 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் தாக்கம் தொடர்புடைய வாக்கியம்?
   அ) இந்தியாவின் நிர்வாகம் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது.
   ஆ) இந்தியா ஆங்கில அரசின் காலனியாக உருவாதல்
   இ) இராணுவத்தில் இந்தியர்கள் எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்பட்டது
   **ஈ) இவையனைத்தும்**

8. 1859 ஆம் ஆண்டு இண்டிகோ கிளர்ச்சிக்கான காரணம்?
   அ) ஐரோப்பிய தோட்டக்காரர்கள் இண்டிகோ பயிரை பயிரிட வற்புறுத்தி விவசாயிகள் சுரண்டப்பட்டனர்
   ஆ) விவசாயிகளால் தாங்கள் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியவே இல்லை.
   **இ) மேற்கண்ட இரண்டும்**
   ஈ) மேற்கண்ட எவையுமில்லை

9. பொருத்துக.
   அ. ∴பராசி இயக்கம் - 1. சித்து மற்றும் கணு
   ஆ. வஹாபி கிளர்ச்சி - 2. ஹாஜி ஷரியத்துல்லா
   இ. சாந்தலர்களின் கிளர்ச்சி - 3. பிர்சா முண்டா
   ஈ. முண்டா கிளர்ச்சி - 4. டிடு மீர்
   அ) 2 4 3 1 ஆ) 2 3 4 1 ***இ) 2 4 1 3*** ஈ) 3 4 1 2

10. கால வரிசைப்படுத்துக.
   1. சென்னைவாசிகள் சங்கம் 2. சென்னை மகாஜன சபை
   3. பம்பாய் மாகாண சங்கம் 4. பூனா சர்வஜனிக் சபை
   ***அ) 1 4 2 3*** ஆ) 2 3 4 1 இ) 3 4 2 1 ஈ) 4 1 2 3

11. இந்திய தேசிய காங்கிரஸின் முதலாவது மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர்
   **அ) A.O. ஹியூம்** ஆ) பத்ருதீன் தியாப்ஜி இ) J.B. கிருபாளனி ஈ) W.C. பானர்ஜி

12. கீழ்க்காண்பவர்களில் தீவிர தேசியவாதியாக இல்லாதவர் யார்?
   அ) பிபின் சந்திரபால் ஆ) பால கங்காதர திலகர்
   இ) லாலா லஜபதிராய் **ஈ) கோபால கிருஷ்ண கோகலே**

13. சுதேசி இயக்கத்தின் போது இந்தியாவின் வைசிராயாக இருந்தவர்?
**அ) கர்சன் பிரபு** ஆ) இர்வின் பிரபு இ) வெலிங்டன் பிரபு ஈ) லேண்ட்ஸ்டவுன் பிரபு

14. தன்னாட்சி இயக்கம் எப்போது திலகரால் தொடங்கப்பட்டது?
அ) மே 1916 **ஆ) ஏப்ரல் 1916** இ) மார்ச் 1919 ஈ) டிசம்பர் 1918

15. லக்னோ ஒப்பந்தம் (1916) யாருக்கிடையே ஏற்பட்டது?
**அ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்** ஆ) இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள்
இ) ஆங்கிலேயர்கள் மற்றும் இந்தியர்கள் ஈ) மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள்

## வரலாறு - அலகு 8. காந்திய காலகட்டம்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

2. "தீன் காதியா" முறை குறிப்பிடுவது ________
**அ) சம்பரான் விவசாயிகள் தங்களின் நிலத்தின் இருபதில் மூன்று பங்கு பகுதியில் பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர்.**
ஆ) சம்பரான் விவசாயிகள் தங்களின் நிலத்தின் மூன்று பங்கும் அவுரி பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர்.
இ) சம்பரான் விவசாயிகள் தங்களின் நிலத்தின் மூன்றில் ஒவ்வொரு கத்தாவும் பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர்.
ஈ) சம்ரான் விவசாயிகள் தங்களின் நிலத்தில் மூன்று பயிர்கள் பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர்.

2. 1917 இல் சம்பரான் பகுதியில் எவ்வகை பயிரை பயிரிட ஆங்கிலேயர்கள் கட்டாயப்படுத்தினர்?
அ) அபின் ஆ) நறுமணப் பொருட்கள் **இ) அவுரி** ஈ) சணல்

3. கீழ்க்கண்டவைகளை சரியான காலவரிசைப்படுத்துக.
1. சம்பரான் சத்தியாகிரகம் 2. கேதா சத்தியாகிரகம்
3. ரௌலட் சத்தியாகிரகம் 4. பர்தோலி சத்தியாகிரகம்
அ) 1 2 4 3 ஆ) 1 4 2 3 **இ) 1 2 3 4** ஈ) 1 3 4 2

4. ஜாலியன் வாலாபாக் படுகொலையை நடத்தியவர் யார்?
அ) கர்னல் ஜில்லெஸ்பி ஆ) நிகேல் கோலட் **இ) ரெஜினால்டு டயர்** ஈ) கிச்லு

5. ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1919 **ஆ) 1920** இ) 1927 ஈ) 1928

6. இந்திய தேசிய இராணுவத்தின் ஒருங்கமைத்தவர் யார்?
அ) பகத் சிங் ஆ) சந்திர சேகர் ஆசாத்
**இ) சுபாஷ் சந்திர போஸ்** ஈ) வல்லபாய் பட்டேல்

7. சௌரி சௌரா நிகழ்ச்சி நடைபெற்ற ஆண்டு ________
**அ) பிப்ரவரி 1922** ஆ) மார்ச் 1922 இ) ஏப்ரல் 1922 ஈ) மே 1922

8. சைமன் குழு புறக்கணிப்பை மேற்கொண்டு பின்னர் இறந்தவர் யார்?
அ) பாலகங்காதர திலகர் **ஆ) லாலா லஜபதிராய்**
இ) கோபால கிருஷ்ண கோகலே ஈ) பிபின் சந்திர பால்

9. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?
அ. முதல் வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார்.
ஆ. இரண்டாவது வட்டமேசை மாநாடு வெற்றி அடைந்தது.
அ) அ மட்டும் ஆ) ஆ மட்டும் இ) இரண்டுமே **ஈ) எதுவுமில்லை**

10. இந்திய அரசால் சாசன நிர்ணய மன்றம் அமைக்கப்பட வழிகோலியவை
அ) கிரிப்ஸ் தூதுக்குழு 1942 **ஆ) அமைச்சரவை தூதுக்குழு 1946**
இ) சைமன் தூதுக்குழு 1927 ஈ) இவற்றில் எதுவுமில்லை

11. எந்த நாளினை நேரடி நடவடிக்கை நாளாக முஸ்லீம் லீக் அறிவித்தது?
அ) ஆகஸ்டு 6, 1945 ஆ) ஆகஸ்டு 16, 1945
இ) ஆகஸ்டு 6, 1946 **ஈ) ஆகஸ்டு 16, 1946**

12. இந்திய சுதந்திரத்தின் போது பிரிட்டனில் ஆட்சியிலிருந்த கட்சி
அ) பொதுவுடைமை கட்சி ஆ) பழமைவாத கட்சி **இ) தொழிற்கட்சி** ஈ) தாராள கட்சி

13. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப் பிரிவின் பெயர்
    அ) சாந்த் பீபி ஆ) அஹில்யா பாய் ***இ) ஜான்சி ராணி*** ஈ) ராணி கைடிள்லியு

14. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் காங்கிரஸ் அமைச்சரவை அமையாத மாகாணம் எது?
    அ) மதராஸ் ***ஆ) பஞ்சாப்*** இ) பம்பாய் ஈ) பீகார்

15. சுபாஸ் சந்திர போஸின் முழக்கம்
    அ) சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை ஆ) செய் அல்லது செத்துமடி
    ***இ) தில்லிக்கு புறப்படு*** ஈ) இவற்றில் எதுவுமில்லை

## வரலாறு - அலகு 9. தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக.**

1. சென்னைவாசிகள் சங்கத்தில் அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தோர்............
    அ) நிலப்பிரபுக்கள் ***ஆ) வணிகர்கள்***
    இ) விவசாயிகள் ஈ) வட்டிக்கு கடன் கொடுப்போர்

2. எந்த ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக. T.முத்துசாமி நியமிக்கப்பட்டார்?
    அ) 1777 ஆ) 1874 ***இ) 1877*** ஈ) 1977

3. கூற்று: தொடக்ககால தேசியவாதிகள் அரசமைப்பு வழிமுறைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர்.
   காரணம்: அவைக்கூட்டங்கள் நடத்துவதும் பிரச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுவதும் அவர்களின் செயல்பாடுகளாக இருந்தன.
    அ) கூற்று,காரணம் ஆகிய இரண்டும் சரி
    ஆ) கூற்று சரி, காரணம் தவறு
    இ) கூற்று,காரணம் ஆகிய இரண்டும் தவறு
    ***ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.***

4. சரியான கூற்றை தேர்வு செய்க
   i) சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.
   ii) அந்நியப் பண்டங்களைப் புறக்கணித்தல் தொடர்பாக காங்கிரஸ் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது.
   iii) மக்களை திரட்டுவதற்கு தமிழ் பயன்படுத்தப்படவில்லை
   iv) மிதவாத தேசியவாத தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.
    அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (iii) மட்டும் சரி
    இ) (iv) மட்டும் சரி ***ஈ) அனைத்தும் சரி***

5. சிறைத்தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதி எங்கு சென்றார்?
    அ) கல்கத்தா ஆ) பம்பாய் இ) டெல்லி ***ஈ) பாண்டிச்சேரி***

6. இந்திய தன்னாட்சி இயக்கம் எதனை மாதிரியாக கொண்டு அமைக்கப்பட்டது?
    ***அ) அயர்லாந்து*** ஆ) சோவியத் ரஷ்யா
    இ) இங்கிலாந்து ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

7. பொருத்துக
   i) லாவோ - 1) காலாட்படையை சேர்ந்தவர்
   ii) விஜயா - 2) கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையம்
   iii) ஜேம்ஸ் நீல் - 3) கப்பல்
   iv) வாணியம்பாடி - 4) பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்த பத்திரிக்கை
    அ) 4 1 2 3 ***ஆ) 3 4 1 2*** இ) 2 1 3 4 ஈ) 1 2 3 4

8. 1917இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைவராக தேர்வு செய்யப்பட்டவர் யார்?
    அ) திலகர் ஆ) T.M. நாயர் ***இ) அன்னிபெசன்ட்*** ஈ) காந்தியடிகள்

9. தமிழ்நாட்டில் கிலாபத் நாள் அனுசரிக்கப்பட்ட தினம்
    அ) ஏப்ரல் 17,1921 ஆ) ஏப்ரல் 16,1920 இ) மே 18,1920 ***ஈ) ஏப்ரல் 17,1920***

10. எந்த எதிர்ப்பு இயக்கத்தின் போது காந்தியடிகள் 'செய் அல்லது செத்துமடி' எனும் முழக்கத்தை வழங்கினார்?
***அ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்*** ஆ) இந்தி எதிர்ப்பு இயக்கம்
இ) சட்டமறுப்பு இயக்கம் ஈ) ஒத்துழையாமை இயக்கம்

11. 'ரோசாப்பு துரை' என அழைக்கப்பட்டவர்
அ) பாரதியார் ***ஆ) ஜார்ஜ் ஜோசப்*** இ) பெரியார் ஈ) டயர்

12. 1927ஆம் ஆண்டின் இந்திய சட்டப்பூர்வ ஆணையத்திற்கு தலைமையேற்றவர்
அ) ஜெனரல் டயர் ஆ) ஜார்ஜ் ஜே ***இ) சர் ஜான் சைமன்*** ஈ) சுப்பராயன்

## வரலாறு - அலகு 10 தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் வெளியிடப்பட்ட இடம்
அ) சென்னை ஆ) பம்பாய் ***இ) கோவா*** ஈ) டெல்லி

2. 14 வரிச்செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தவர் யார்?
***அ) பரிதிமாற் கலைஞர்*** ஆ) மறைமலை அடிகள்
இ) திரு.வி.க ஈ) பாரதிதாசன்

3. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் முதல் தேர்தல் நடைபெற்ற ஆண்டு
அ) 1919 ***ஆ) 1920*** இ) 1921 ஈ) 1922

4. சரியான கூற்றை தேர்ந்தெடு.
i) நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாக நீதிக்கட்சி விளங்கிற்று.
ii) 1937இல் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் பங்கேற்கவில்லை.
iii) 1920இல் சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார்.
iv) 1930இல் பொதுப்பணியாளர் தேர்வாணையத்தை பிரிட்டிஷ் இந்திய அரசு உருவாக்கியது.
அ) (i), (ii) ஆகியன சரி ***ஆ) (i), (iii) ஆகியன சரி***
இ) (iv) சரி ஈ) (ii), (iii) ஆகியன சரி

5. **கூற்று :** பெண்களின் விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.
காரணம் : இது பாலின சமத்துவம் மற்றும் பாலினம் குறித்த சமூகத்தின் உணர்வுகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை ஆற்றியது.
***அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி***
ஆ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல.
இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை தவறு.
ஈ) காரணம் சரி. ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

6. பொருத்துக.
i) சித்திரபுத்திரன் - 1) மறைமலை அடிகள்
ii) ஆந்திர பிரகாசிகா - 2) M.C. ராஜா
iii) சித்தாந்த தீபிகா - 3) பெரியார்
iv) நீதிக் கட்சியின் துணைத் தலைவர் - 4) நீதிக்கட்சி
***அ) 3 4 1 2*** ஆ) 4 3 1 2 இ) 2 3 4 1 ஈ) 1 2 3 4

7. பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு
அ) 1915 ***ஆ) 1916*** இ) 1917 ஈ) 1918

8. மாறுபட்ட ஒன்றினை கண்டுபிடி,
அ) ராவ் சாகிப் ஆ) ராவ் பகதூர் ***இ) தந்தை*** ஈ) திவான் பகதூர்

9. தஞ்சாவூர் சங்கீத வித்யா மகாஜன சங்கம் எனும் அமைப்பை தோற்றுவித்தவர்
அ) M.C. ராஜா ஆ) Dr. முத்துலட்சுமி அம்மையார்
இ) T.M. நாயர் ***ஈ) ஆபிரகாம் பண்டிதர்***

10. நீலாம்பிகை என்பவர் யாருடைய மகள்?
***அ) மறைமலை அடிகள்*** ஆ) பி. சுந்தரனார்
இ) சி.வை. தாமோதரனார் ஈ) உ.வே. சாமிநாதர்

11. உ.வே. சாமிநாதர் யாருடைய மாணவர்?
அ) ராபர்ட் கால்டுவெல் ***ஆ) மீனாட்சி சுந்தரனார்***
இ) சீகன் பால்கு ஈ) சி.வை. தாமோதரனார்

12. சென்னை மாகாணத்தில் தொழில் கல்வியை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) பெரியார் ஆ) திரு. வி. க ***இ) இராஜாஜி*** ஈ) M.C. ராஜா

## புவியியல் - அலகு 1. இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. இரண்டு பெரிய நிலப்பரப்பை பிரிக்கும் குறுகிய நீர்பரப்பு ________ எனப்படும்.
அ) சிகரம் ஆ) கணவாய் ***இ) நீர்ச்சந்தி*** ஈ) பள்ளத்தாக்கு
2. சீனா உலகின் ________ பெரிய நாடாகும்.
அ) இரண்டாவது ***ஆ) நான்காவது*** இ) மூன்றாவது ஈ) ஏழாவது
3. சூரியனின் செங்குத்து கதிர்கள் கடகரேகையில் ________ல் செங்குத்தாக விழும்.
***அ) 21ஜுன்*** ஆ) 22டிசம்பர் இ) 21மார்ச் ஈ) 22ஜுலை
4. இந்தியாவின் தென்கோடி முனையின் அட்ச பரவல் ________
***அ) $8^{o}$ 4' வடக்கு*** ஆ) $8^{o}$ 4' தெற்கு இ) $6^{o}$ 4'வடக்கு ஈ) $6^{o}$ 4'தெற்கு
5. இந்திரா முனை கடலில் மூழ்கிய ஆண்டு ________
அ) 2005 ***ஆ) 2004*** இ) 2007 ஈ) 2002
6. குஜராத்திற்கும் அருணாச்சல பிரதேசத்திற்கும் இடையே உள்ள நேர வேறுபாடு ________
அ) 2மணி 35நிமிடம் ஆ) 2மணி 10நிமிடம்
இ) 2 மணி நேரம் ***ஈ) 1மணி 56 நிமிடம்***
7. இந்தியா வடக்கு-தெற்காக நீண்டு காணப்படும் தூரம் ________
***அ) 3214 கி.மீ*** ஆ) 2933 கி.மீ இ) 3241 கி.மீ ஈ) 3213 கி.மீ
8. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு ________ மில்லியன் சதுர கி. மீட்டர்களாகும்.
அ) 7.68 ஆ) 8.54 ***இ) 3.28*** ஈ) 9.59
9. இந்தியாவின் மேற்கு பகுதியில் நில எல்லையை கொண்டுள்ள நாடு ________
அ) சீனா ஆ) நேபாளம் இ) பூடான் ***ஈ) பாகிஸ்தான்***
10. அந்தமான் நிக்கோபார் தீவுக்கூட்டங்களின் தலைநகரம் ________
அ) கவராட்டி ஆ) புதுச்சேரி
***இ) போர்ட் பிளேயர்*** ஈ) டையூ - டாமன்
11. கடக அட்சம் செல்லாத மாநிலம் ________
அ) இராஜஸ்தான் ஆ) சட்டீஸ்கர் ***இ) ஒடிசா*** ஈ) திரிபுரா
12. பிரம்மப்புத்திரா நதியில் அமைந்துள்ள ஆற்றுத்தீவு ________
அ) இசுகத்திப்பா தீவு ***ஆ) மஜுலி தீவு*** இ) மினிகாய் தீவு ஈ) நிட்ரனி தீவு
13. எந்த அணை மாகாநதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது?
அ) பக்ரா அணை ***ஆ) ஹிராகுட் அணை***
இ) நாகர்ஜுனா அணை ஈ) சர்தார் சரோவார் அணை
14. தீபகற்ப இந்தியாவின் மிக நீளமான ஆறு எது?
அ) வாணியாறு ஆ) காவேரி ***இ) கோதாவரி*** ஈ) கிருஷ்ணா
15. கோதாவரியில் வடக்கு கரையில் உள்ள துணை நதி எது?
அ) அமராவதி ஆ) வர்ணா இ) அருணாவதி ***ஈ) மாஞ்சிரா***
16. எந்த ஆற்றில் சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சி அமைந்துள்ளது?
***அ) காவிரி*** ஆ) பிராமணி இ) கோதாவரி ஈ) கிருஷ்ணா
17. தீபகற்ப இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளில் மிகபெரிய ஆறு எது?
அ) லூனி ஆ) மாஹி ***இ) நர்மதை*** ஈ) சபர்மதி
18. துகாந்தர் நீர்வீழ்ச்சி எந்த ஆற்றில் அமைந்துள்ளது?
***அ) நர்மதை*** ஆ) தபதி இ) சபர்மதி ஈ) மாஹி
19. நர்மதையின் இரட்டை நதி எது?
அ) லூனி ஆ) மாஹி ***இ) தபதி*** ஈ) சபர்மதி

20. மிகப்பெரிய நீர் பிடிப்பு உள்ள ஆற்றுப் படுக்கை எது?
**அ) கங்கை** ஆ) சிந்துநதி இ) கோதாவரி ஈ) கிருஷ்ணா

21. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் எது சரி?
I. தீபகற்ப பீடபூமி மிக கடினமான புவி அமைப்பை கொண்டது
II. இமயமலை, இளமையான மிருதுவான புவி அமைப்பை கொண்டது
அ) I மட்டும் ஆ) II மட்டும் **இ) I மற்றும் II** ஈ) எதுவும் இல்லை

22. இமயமலையின் தோற்றம் இதில் மிக சிறந்த விளக்கத்தை கொண்டுள்ளது.
அ) கண்டங்களின் இடம் பெயர்வு கோட்பாடு ஆ) கடல் தரையின் விளக்க படம்
இ) கடல் தரை பரவல் **ஈ) புவித்தட்டு கோட்பாடு**

23. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் இமயமலை பற்றிய சரியான தகவலை தேர்ந்தெடு:
I. காலநிலை அரணாக விளங்குகிறது
II. பருவக்காற்றுகளை தடுத்து இந்திய துணை கண்டத்திற்கு மழையை பெற்றுத்தரவில்லை
**அ) I மட்டும்** ஆ) II மட்டும் இ) I மற்றும் II ஈ) எதுவும் இல்லை

## புவியியல் - அலகு 2. இந்தியா - காலநிலை, இயற்கை தாவரங்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ஊசியிலை தாவரங்கள் எந்த வெப்பநிலை விகிதத்தில் காணப்படுகிறது.
அ) - 12 °C மற்றும் 20° C ஆ) - 18 °C மற்றும் 25° C
இ) - 30 °C மற்றும் 10° C **ஈ) - 25 °C மற்றும் 20° C**

2. பாலைவனத்தில் வளரும் தாவரங்களின் வகைகள் எவை?
அ) மாஸ்கள் மற்றும் லைக்கண்கள்
ஆ) பைன்மரம் மற்றும் சப்பாத்திகள்ளி
இ) யானைபுல் மற்றும் சப்பாத்திகள்ளி
**ஈ) கடினமான புற்கள் மற்றும் புதர் காடுகளும்**

3. பருத்த மரங்கள் பொதுவாக இந்த பகுதியில் காணப்படுகின்றன
அ) சூரிய வெளிச்சத்திற்கும் காலம் குறைவாக உள்ள பகுதியில்
**ஆ) சூரிய வெளிச்சக் காலம் அதிகமாக உள்ள பகுதியில்**
இ) ஆலங்கட்டி அதிகமாக உள்ள பகுதியில்
ஈ) ஆலங்கட்டி குறைவாக உள்ள பகுதிகளில்

4. தூந்திரா என்ற சொல்லின் பொருள்
அ)வளமான நிலம் **ஆ) தரிசு நிலம்** இ) வெள்ள பெருக்கு உள்ள நிலம் ஈ) வறட்சியான நிலம்

5. இலைகளை உதிர்க்காத மரங்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன.
அ) வெப்ப பாலைவனப் பகுதிகளில்
ஆ) வெப்ப மண்டல பருவ காற்று பகுதிகளில்
**இ) ஊசியிலைக் காடுகள் உள்ள பகுதிகளில்**
ஈ) மித வெப்பமண்டல இலையுதிர் காட்டுப்பகுதியில்

6. வெப்பநிலை குறைவால் இலைகளை உதிர்க்கக் கூடிய மரங்களை கொண்டுள்ள காடுகளை இவ்வாறு வகைப்படுத்தலாம்?
அ) வறண்ட பாலைவன காடுகள் ஆ) வெப்ப பருவ காற்று காடுகள்
இ) ஊசியிலை காடுகள் **ஈ) மித வெப்பமண்டல இலையுதிர் காடுகள்**

7. தென்கிழக்கு பிரேசில், தென்தேற்கு ஆப்பிரிக்கா, மியான்மர் மற்றும் வங்காளத்தில் காணப்படும் காடுகள்
**அ) வெப்ப மண்டல பருவ காடுகள்** ஆ) வெப்ப மண்டல மலை காடுகள்
இ) ஊசியிலை மலை காடுகள் ஈ) மித வெப்பமண்டல இலையுதிர் காடுகள்

8. மித வெப்பமண்டல புல்வெளி பகுதிகளில் மழை அளவின் விகிதம்
**அ) 200 முதல் 1000 மி.மீ** ஆ) 750 முதல் 1000 மி.மீ
இ) 650 முதல் 900 மி.மீ ஈ) 600 முதல் 800 மி.மீ

9. பல வகையான மரங்கள் காணப்படும் காடு ________
**அ) ஊசியிலை காடுகள்** ஆ) வெப்ப மண்டல இலையுதிர் காடுகள்
இ) வெப்ப பாலைவன காடுகள் ஈ) வெப்பமண்டல பருவகாற்று காடுகள்

10. எந்த வகையான காலநிலையில் அடர்ந்த காடுகள் காணப்படும்?
    ***அ) நிலநடுகோட்டு பகுதியில்*** ஆ) பருவ காற்று பகுதிகளில்
    இ) துருவ பகுதிகளில் ஈ) இவை அனைத்தும்

11. பாசிகளும் மற்றும் காளான்களும் சிறிய மரங்களும் இவ்வகையான பகுதிகளில் காணப்படுகின்றன
    அ) ஆலங்கட்டி மழை அதிகமாக உள்ள பகுதிகளில்
    ஆ) ஆலங்கட்டி மழை குறைவாக உள்ள பகுதிகளில்
    ***இ) குறுகிய சூரிய வெளிச்சம் உள்ள பகுதிகளில்***
    ஈ) நீண்ட கால அளவுள்ள சூரிய வெளிச்சம் உள்ள பகுதிகளில்

12. காடுகள் அதிகமாக அழிக்கப்படுவதை இவ்வாறு அழைக்கலாம்?
    அ) வில்லோ மரங்கள் அழிக்கப்படுதல் ஆ) துருவ காடுகள் அழிக்கப்படுதல்
    இ) காடுகள் பாதுகாக்கப்படுதல் ***ஈ) காடுகள் அழிக்கப்படுதல்***

13. தென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் காடுகளின் சதவீதம்
    அ) 58% ***ஆ) 23%*** இ) 39% ஈ) 19%

14. தாவரங்களும் காடுகளும் இலையுதிர்க்கும் காலம்
    அ) கோடை காலம் ஆ) வசந்த காலம்
    ***இ) குளிர் காலம்*** ஈ) இவற்றில் எதுவுமில்லை

15. மரங்களின் உயரம், வெப்பமண்டல இலையுதிர் காடுகளில்
    ***அ) 8 முதல் 30மீ உயரம் வரை*** ஆ) 10 முதல் 15மீ உயரம் வரை
    இ) 30 முதல் 40மீ வரை ஈ) 20 முதல் 40மீ உயரம் வரை

## புவியியல் - அலகு 3. வேளாண்மைக் கூறுகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக.**

1. இது ஒரு மேல்நிலைப் பாசனம் ஆகும்?
    ***அ) மத்திய பைவட் பாசனம்*** ஆ) தெளிப்பான் பாசனம்
    இ) மொட்டை மாடி பாசனம் ஈ) சொட்டு நீர்ப்பாசனம்

2. வெள்ளப் பாசனம் வருடம் முழுவதும் இயங்கும் என்ற கூற்றுக்கான காரணம் ________
    அ) சரி ***ஆ) தவறு***

3. மேற்பரப்பு நீர்ப்பாசனம் ________ வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
    அ) 2 ஆ) 4 ***இ) 3*** ஈ) 5

4. நீர்ப்பாசனம் கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் அதிகம் காணப்படுகிறது?
    அ) மத்தியப் பிரதேசம் ஆ) உத்திரப்பிரதேசம்
    இ) இமாச்சலப்பிரதேசம் ***ஈ) ஆந்திரப்பிரதேசம்***

5. ட்ரிக்கிள் நீர் பாசனத்தின் புலன் நீர் திறன் அளவானது ___________
    அ) 50-55% ஆ) 55-85% ***இ) 80-90%*** ஈ) 60-70%

6. துணை நீர்ப்பாசனம் கீழ்க்காண் எப்பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றது?
    அ) நிலத்தடி நீர் குறைவான பகுதிகளில் ***ஆ) நிலத்தடி நீர் அதிகமான பகுதிகளில்***
    இ) சரிவான பகுதிகளில் ஈ) சமமான பகுதிகளில்

7. நீர்ப்பாசனத்திற்கான நீர் கீழே கொடுக்கப்பட்டுள்ள _________ ஆதாரங்களில் இருந்து கிடைக்கிறது.
    ***அ) 3*** ஆ) 2 இ) 4 ஈ) 5

8. பெர்டிகேசன் (pertication) என்பது _________
    அ) தெளிப்பான் நீர்ப்பாசனம் ஆ) மேல்மட்ட நீர்ப்பாசனம்
    ***இ) சொட்டு நீர்ப்பாசனம்*** ஈ) பைவட் நீர்ப்பாசனம்

9. புலன் நீர்த்திறன் _________ மூலம் தீர்மானிக்கப்படுகிறது.
    அ) பயிரிலிருந்து நீர் ஆவியாதல் - வயலுக்கு நீர்ப் பாய்ச்சுதல்
    ***ஆ) பயிர் நீரை உறிஞ்சிக் கொள்வது – வயலுக்கு நீர்ப் பாய்ச்சுதல் (100%)***
    இ) பயிர் நீரை உருஞ்சுதல் - தண்ணீரை வயலுக்கு பாய்ச்சுதல்
    ஈ) பயிரிலிருந்து நீர் ஆவியாதல் - தண்ணீரை வயலுக்கு பாய்ச்சுதல் (100%)

10. ஸ்டோட் நீர்ப்பாசனம் என்பது மேல்மட்ட நீரின் ஒரு வகையான நீர் பாசனம் - இக்கூற்று
    ***அ) சரி*** ஆ) தவறு
11. நுண்ணிய நீர்ப்பாசனம் _________ என்றும் அழைக்கலாம்.
    அ) நானோ பாசனம் ஆ) பெட்டைட் நீர்ப்பாசனம்
    ***இ) உள்ளூர் நீர்ப்பாசனம்*** ஈ) வெள்ளப்பாசனம்
12. நுண்துளைக் கிணறுகள் ________ மாநிலத்தில் பயன்படுத்தவில்லை.
    அ) உத்திரப்பிரதேசம் ஆ) ஹரியானா இ) குஜராத் ***ஈ) இராஜஸ்தான்***
13. நீலப்புரட்சி இதனோடு தொடர்புடையது ________
    ***அ) மீன் உற்பத்தி*** ஆ) உணவு உற்பத்தி
    இ) எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி ஈ) பால் உற்பத்தி
14. இந்திய விவசாயம் கீழே குறிக்கப்பட்டுள்ள பண்புகளைக் கொண்டுள்ளது __________
    அ) அதிக நிலம், தொழிலாளர் குறைவான பொருளாதாரம்
    ஆ) அதிக நிலம், அதிகமான தொழிலாளர் பொருளாதாரம்
    ***இ) குறைவான நிலம், அதிகமான தொழிலாளர் பொருளாதாரம்***
    ஈ) குறைவான நிலம், தொழிலாளர் குறைவான பொருளாதாரம்
15. Dr.M.S.சாமிநாதன் கீழ்க்காண் எத்துறையில் புகழ் பெற்றவர்?
    அ) அணு இயற்பியல் ***ஆ) விவசாயம்***
    இ) ஆஸ்டிரோ இயற்பியல் ஈ) மருத்துவம்
16. இந்தியாவில் பசுமைப் புரட்சி _________ என்பவர் எடுத்த முயற்சிகளால் ஏற்பட்டது.
    ***அ) Dr.M.S.சாமிநாதன்*** ஆ) C.ரங்கராஜன்
    இ) K.V.காமத் ஈ) ராகேஷ் மோகன்
17. தேசிய விவசாயம் மற்றும் கிராமப் புற வளர்ச்சி வங்கி (NABARD) தொடங்கிய வருடம் _______
    அ) 1970 ஆ) 1975 இ) 1980 ***ஈ) 1982***
18. NABARD – ன் தலைமையகம் அமைந்துள்ள இடம் ___________
    அ) லக்னோ ஆ) ஹைதராபாத் இ) புது டெல்லி ***ஈ) மும்பை***
19. நெல் ஆராய்ச்சி நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?
    அ) பெங்களூரு ஆ) கான்பூர் இ) கோயம்புத்தூர் ***ஈ) கட்டாக்***
20. NABARD – எந்த ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது?
    அ) நான்காவது ஐந்தாண்டு திட்டம் ஆ) ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம்
    ***இ) ஆறாவது ஐந்தாண்டு திட்டம்*** ஈ) எட்டாவது ஐந்தாண்டு திட்டம்
21. எந்த ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயத்தின் வளர்ச்சி குன்றியது?
    ***அ) மூன்றாவது ஐந்தாண்டு திட்டம்*** ஆ) ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம்
    இ) ஏழாவது ஐந்தாண்டு திட்டம் ஈ) ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம்
22. இந்தியாவின் 'வெண்மைப் புரட்சியின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
    அ) Dr.M.S. சாமிநாதன் ***ஆ) ஏ.ஏ.குரியன்***
    இ) K.N. பாகல் ஈ) B.P.பால்

## புவியியல் - அலகு 4. வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக.**

1. பூமியில் பரவலாக காணப்படும் வளங்களை இவ்வாறு அழைக்கலாம்?
   ***அ) எங்கும் நிறைந்த வளங்கள்*** ஆ) புதுப்பிக்க இயலாத வளங்கள்
